இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 41 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 04 – சனிக்கிழமை 20 செப்டம்பர் 2025 – சென்னை 36 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 41: Thiruvalluvar Year - 2056 - Purataasi 04 - Saturday 20 September 2025 - Chennai 36 Pages ₹ 5.00


## தமிழ்நாடு அரசு வளர்ச்சித் திட்டங்களை அக்கறையோடு செயல்படுத்துகிறது!

# எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.10 கோடியாக உயர்த்துக!

## ஒன்றிய அரசுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!



**சென்னை, செப். 20-**

**சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் ஐந்தாவது ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாடு அரசு வளர்ச்சித் திட்டங்களை அக்கறையோடு செயல்படுத்துகிறது என்றும், எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியை ஒன்றிய அரசு ரூ.10 கோடியாக உயர்த்திட வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (19.09.2025) தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை 10வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில், மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் (DISHA) குழுவின் மாநில அளவிலான ஐந்தாவது ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் தொடக்கத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வரவேற்புரை ஆற்றினார்.

பின்னர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய தலைமையுரை வருமாறு:-

"DISHA" கமிட்டிக் கூட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து முறையாக நடத்தி வருகிறது. நமது அரசு பொறுப்பேற்ற பிறகு இது ஐந்தாவது கூட்டம். ஒன்றிய அரசின் திட்டங்களை செயல்படுத்துவதை கவனமுடன் கண்காணித்து வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் அக்கறையோடு நமது அரசு செயல்பட்டு வருகிறது.

இந்தக் கூட்டத்தில்,

- தீன்தயாள் அந்தியோதயா யோஜனா-தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்,
- நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்,
- பிரதமரின் கிரிஷி சிஞ்சாயி திட்டம்,
- ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களின் செயல்பாடுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**இந்தியாவிற்கே முன்னுதாரணம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு, இயக்கமாகி இன்று இந்தியாவிற்கே முன்னுதாரண மாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஒன்றிய அரசின் "தீன்தயாள் அந்தியோதயா யோஜனா - தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்" ஒன்றிய மற்றும் மாநில அரசின் 60:40 என்ற நிதிப்பங்களிப்பின் அடிப்படையில் முதல் 37 ஊரக மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராமப்புறங்களில் 3.38 இலட்சம் சுய உதவிக் குழுக்களும், நகர்ப்புறங்களில் 1.41 இலட்சம் சுய உதவிக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்களில் 55.12 இலட்சம் உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

இந்தத் திட்டத்தின் கீழ், 45,312 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதியாக 67 கோடியே 97 இலட்சம் ரூபாயும், சமுதாய முதலீட்டு நிதியாக 75,127 சுய உதவிக் குழுக்களுக்கு 801 கோடியே 62 இலட்சம் ரூபாயும், நலிவு நிலைக்குறைப்பு நிதியாக 13,546 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு 75 கோடியே 73 இலட்சம் ரூபாயும் வழங்கியுள்ளது.

முதியோர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் மற்றும் பழங்குடியினரைக் கொண்டு 25,001 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,57,316 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்


